செய்தி வெளியீடு எண். 163 நாள். 26.03.2018

**<u>தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் 29.03.2018 அன்று நடைபெறவுள்ளது - மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்</u>**

தமிழ்நாடு அரசு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் திருவள்ளுர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் திருவள்ளுர் மாவட்ட நிர்வாகமும் இணைந்து வருகின்ற 29.03.2018 (வியாழக்கிழமை) அன்று தனியார்துறையில் வேலைவாய்ப்பு முகாமினை திருவள்ளுர் மாவட்ட ஜெயா கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகம், திருநின்றவூரில் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்படவுள்ளது.

இவ்வேலைவாய்ப்பு முகாமில் சுமார் 100-க்கு மேற்பட்ட தனியார் துறை வேலையளிப்பவர்கள் பங்கேற்று தேவையான வேலைநாடுநர்களை பணிக்கு தேர்வு செய்யப்பட உள்ளனர். இம்முகாம் 29.03.2018 (வியாழக்கிழமை) அன்று காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை நடைபெறவுள்ளது. திருவள்ளுர் மாவட்டத்தில் உள்ள படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் 8-ஆம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு மற்றும் ஐ.டி.ஐ., டிப்ளமோ முடித்தவர்கள் அனைவரும் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இம்முகாமில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கலந்துக்கெண்டு பணி நியமனம் பெற்றவர்களுக்கு ஆணைகளை வழங்குவார்கள்.

இத்தனியார் வேலைவாய்ப்பு முகாமில் பணிநியமனம் பெறுபவர்களின் வேலைவாய்ப்பு அலுவலக பதிவு ரத்து செய்யப்படமாட்டாது எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இவ்வேலைவாய்ப்பு முகாமில் கலந்துகொண்டு வேலைநாடுநர்கள் தேர்வு செய்ய விருப்பம் உள்ள வேலையளிப்பவர்கள் (Employers) மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலரை தொடர்புகொண்டு முகாமில் இட ஒதுக்கீட்டினை உறுதி செய்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளுர்.**